සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ක්‍රිස්තියානි ධර්මය I
கிறிஸ்தவம் I
Christianity I

43 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**
- ❋ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❋ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❋ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ❋ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

---

**1.** 'பைபிள்' என்னும் சொல் எந்த கிரேக்கச் சொல்லிருந்து மாற்றமடைந்து வந்தது?
(1) வுல்காத்தா (2) தியோ (3) நெவுமா (4) பிபிளுஸ் (5) பிபிலியா

**2.** தாவீது, சாவுல் அரசனின் மாளிகைக்கு வருகை தருவது,
(1) வீணை வாசிப்பதற்காகவாகும்.
(2) புல்லாங்குழல் வாசிப்பதற்காகவாகும்.
(3) மத்தளம் கொட்டுவதற்காகவாகும்.
(4) சர்பினா வாசிப்பதற்காகவாகும்.
(5) சித்தார் வாசிப்பதற்காகவாகும்.

**3.** கி.மு. ஏழாம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டில் பலம் மிக்க பேரரசாகியது
(1) அசீரியாவாகும். (2) பபிலோனியாவாகும். (3) யூதேயாவாகும்.
(4) எருசலேமாகும். (5) ஷெக்கெமாகும்.

**4.** 'மொழிநடை சிறப்பானது, இலகுவானது, உயரிய எரேபிய மொழியாகும்.' இவ்வித சிறப்பு அம்சங்களைக் கொண்ட இறையியல் மரபு எது?
(1) J (2) E (3) D (4) P (5) X

**5.** படைப்பு தொடர்பான முதலாவது கதையில் 'பூமி' என்பது,
(1) மண்ணகமாகும். (2) விண்ணகமாகும். (3) நிலமாகும்.
(4) செழுமையாகும். (5) பாலை நிலமாகும்.

**6.** கானானியருக்கு பாம்பின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டது,
(1) அழிவு ஆகும். (2) சாபம் ஆகும். (3) மகிழ்ச்சியாகும்.
(4) வேதனையாகும். (5) செழுமையாகும்.

**7.** ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்னர், இறைவன் உடன்படிக்கை செய்துகொண்ட நபர்கள் யாவர்?
(1) ஆதாம், காயின் (2) நோவா, ஆபேல்
(3) ஆதாம், நோவா (4) காயின், ஆபேல்
(5) நோவா, காயின்

[பக். 2 ஐப் பார்க்க

**8.** திருவிவிலியத்தின் முதல் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி யாக்கோபு இறைவனின் தூதர் ஒருவருடன் மற்போரிட்ட இடம் எது?

(1) பெனியேல் (2) பெத்தேல் (3) கெப்ரோன்
(4) பெயர்செபா (5) மொரியா

**9.** இஸ்ராயேல் மக்களின் மீட்பரான மோசேயின் பிறப்பு, வளர்ப்பு ஆகியவற்றிலிருந்து சிறப்பாக வெளிப்படுவது, இறைவனின்

(1) மேன்மையாகும். (2) மானிட அன்பாகும்.
(3) பராமரிப்பாகும். (4) இரக்கமாகும்.
(5) அன்பாகும்.

**10.** பாஸ்கா உணவில் கசப்புக் கீரை உண்பதனால் அடையாளப்படுத்தப்படுவது,

(1) இறை கட்டளைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்பதாகும்.
(2) தோல்வியை நினைவுகூருதலாகும்.
(3) இறைவனுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையாகும்.
(4) போர் தோல்வியாகும்.
(5) அடிமைத்தனத்தின் கசப்பான துன்ப துயரங்களாகும்.

**11.** சீனாய் உடன்படிக்கையின் மூலம் இஸ்ராயேல் மக்கள் பெற்ற விசேட இறையாசீர்களைக் குறிக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

A - குருத்துவ அரசாதல்
B - அர்ப்பணிக்கப்பட்ட (தூய) இனமாதல்
C - நாடொன்று உரிமையாகுதல்
D - இறைவனுக்கே உரித்தான சொத்தாகுதல்
E - மாபெரும் செல்வம் உரிமையாகுதல்

(1) A யும் B யும் ஆகும். (2) A யும் C யும் ஆகும்.
(3) B யும் C யும் ஆகும். (4) B யும் E யும் ஆகும்.
(5) D யும் E யும் ஆகும்.

**12.** செக்கரியா இறைவாக்கினர் நூலில் 9ம் அத்தியாயத்தில், "மகளே சீயோன் மகிழ்ந்து களிகூரு" எனக் குறிப்பிடப்படுவது யாருடைய வருகையைக் குறித்தாகும்?

(1) தாவீது அரசனின் (2) இறைவாக்கினர் எசாயாவின்
(3) அமைதியின் அரசரின் (4) இறைவாக்கினர் ஓசேயாவின்
(5) இறைவாக்கினர் எரேமியாவின்

**13.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - இறைவன் உயர்த்தினார்.
B - மன்னிப்பு அளித்தார்.
C - மீட்டுக் கொண்டார்.
D - நிறுவினார்.

இவற்றில் எரேமியா என்பதற்குரிய பொருளைத் தருவன,

(1) A யும் B யும் ஆகும். (2) A யும் C யும் ஆகும்.
(3) A யும் D யும் ஆகும். (4) B யும் C யும் ஆகும்.
(5) C யும் D யும் ஆகும்.

**14.** ஆமோஸ் இறைவாக்கினர் எவ்வித இறைவாக்கினராக அறிமுகம் செய்யப்படுகிறார்?

(1) சமூக அமைதி (2) சமூக நீதி (3) சமூக அன்பு
(4) சமூக இரக்கம் (5) சமூக அபிமானம்

**15.** 'கொக்மா' (Hokmah) என்னும் எரேபியச் சொல்லின் பொருள் என்ன?

(1) எதிர்நோக்கு (2) அன்பு (3) ஞானம்
(4) நம்பிக்கை (5) தாழ்மை

[பக். 3 ஐப் பார்க்க

**16.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - எல்லாப் பாடல்களும் நரம்பு வாத்தியக் கருவிகளோடு பாடப்பட்டவையாகும்.

B - சில பாடல்கள் துன்பம், புலம்பல் அல்லது மனத்துயருடன் பாடப்பட்டவையாகும்.

C - பெரும்பாலான பாடல்கள் மகிழ்ச்சியுடனும் நன்றியுணர்வுடனும் பாடப்பட்டவையாகும்.

D - சில பாடல்கள் வாத்தியக் கருவிகள் இன்றிப் பாடப்பட்டவையாகும்.

E - சில பாடல்கள் திருவிவிலியத்தின் வேறு புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

இவற்றுள் திருப்பாடல்கள் நூல் பற்றிய மிகவும் சரியான கூற்றுகளாவன

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D
(4) B, C, E (5) C, D, E

**17.** புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் சமுதாய அமைப்பின்படி வரி தண்டுபடுவர்களை இனத் துரோகிகளாகக் கருதக் காரணம்,

(1) வரித்தண்டும்போது சினம் கொண்டு செயற்பட்டமையாகும்.
(2) மக்களைத் துன்புறுத்தியமையாகும்.
(3) அரசுக்கு எதிராகச் செயற்பட்டமையாகும்.
(4) பழக்கவழக்கங்களுக்கு மதிப்பளிக்காமையாகும்.
(5) உரோமப் பேரரசுக்கு வரி சேகரித்தமையாகும்.

**18.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - 'சாதோக்' என்னும் குருவின் பரம்பரையில் வந்தவர்களாவர்.

B - கலிலேயாவின் யூதா இவர்களின் ஸ்தாபகராவார்.

C - திருமணமாகாமை அவர்களின் வாழ்க்கை நிலையில் ஓர் விசேட அம்சமாகும்.

D - அவர்கள் யூத சமயத்தின் அதிகார அமைப்பின் செல்வாக்கு நிறைந்தவர்கள்.

E - இறைதூதர்கள் மற்றும் தூய ஆவி பற்றிய நம்பிக்கை இல்லாதவர்களாவர்.

இவற்றுள் சதுசேயர் பற்றிய சரியான கூற்றுகள்

(1) A, B, E (2) A, D, E (3) B, C, D
(4) B, C, E (5) C, D, E

**19.** சம நோக்கு நற்செய்தி என அறிமுகம் செய்யப்படுவது,

(1) புனித மத்தேயு, திருத்தூதர் பணிநூல், புனித யோவான் என்பனவாகும்.
(2) புனித மத்தேயு, புனித மாற்கு, புனித லூக்கா என்பனவாகும்.
(3) புனித லூக்கா, புனித மத்தேயு, புனித யோவான் என்பனவாகும்.
(4) புனித யோவான், புனித லூக்கா, புனித மாற்கு என்பனவாகும்.
(5) புனித மத்தேயு, புனித மாற்கு, திருத்தூதர் பணிநூல் என்பனவாகும்.

**20.** 'நானே' என்னும் சுய வெளிப்படுத்தல் பலவற்றை முன்வைத்துள்ள புதிய ஏற்பாட்டு நூல்,

(1) புனித யோவான் நற்செய்தியாகும். (2) புனித லூக்கா நற்செய்தியாகும்.
(3) புனித மாற்கு நற்செய்தியாகும். (4) புனித மத்தேயு நற்செய்தியாகும்.
(5) திருத்தூதர் பணிநூல் ஆகும்.

**21.** சபையில் இணையும் பிற இனத்தவர் மீட்படைய விருத்தசேதனம் செய்ய வேண்டுமா என்னும் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தந்த சங்கம்,

(1) எபேசு ஆகும். (2) நிசேயா ஆகும். (3) எருசலேம் ஆகும்.
(4) கல்சிதோன் ஆகும். (5) திரிதெந்தீன் ஆகும்.

**22.** புனித பவுல் தமது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் எழுதிய திருமுகம் எது?

(1) கலாத்தியர் (2) பிலிப்பியர் (3) எபேசியர்
(4) கொலோசியர் (5) 2 திமோத்தேயு

**23.** கிறிஸ்துநாதர் இறுதிக்காலத்தின் தன்மை பற்றி முன்வைத்த உவமைக் கதை எது?

(1) விதை விதைப்பவன் (2) கடுகு விதை
(3) காணாமற்போன மகன் (4) நல்ல சமாரித்தன்
(5) தோழியர் பத்துப் பேர்

**24.** மோசேயின் பத்துக் கட்டளைகளுக்குப் புதிய கருத்தைக் கொடுத்து இயேசு எட்டு கொள்கைகளை (பேறுகள்) உள்ளடக்கி ஆற்றிய உரை,
(1) மறைபோதக பணி பற்றிய உரையாகும்.
(2) இறுதிக்காலம் பற்றிய உரையாகும்.
(3) உவமைகள் பற்றிய உரையாகும்.
(4) மலைப் பொழிவாகும்.
(5) திருச்சபையின் ஒற்றுமை பற்றிய உரையாகும்.

**25.** புனித பவுல் 'அடிமை' என்பதற்குப் பயன்படுத்தும் கிரேக்கச் சொல் என்ன?
(1) ஈர்ஷா (2) லாமா (3) தலித்தா
(4) மிஸ்னா (5) டூளோஸ்

**26.** "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்" எனக் கூறப்பட்டது,
(1) திருமுழுக்கு யோவான் திருமுழுக்குக் கொடுத்த சந்தர்ப்பத்திலாகும்.
(2) இயேசுவின் முதற் போதனையின்போதாகும்.
(3) எரேமியா இறைவாக்கினர் போதித்த ஒரு சந்தர்ப்பத்திலாகும்.
(4) புனித பேதுருவின் பெந்தகோஸ்தே நாள் மறை உரையிலாகும்.
(5) புனித பவுல் அந்தியோக்கியாவில் ஆற்றிய மறை உரையிலாகும்.

**27.** எருசலேம் மரபைப் பின்பற்றித் தமது நற்செய்தியை எழுதியவர்கள்,
(1) புனித பவுல் மற்றும் புனித மாற்கு ஆகியோராவர்.
(2) புனித பவுல் மற்றும் புனித லூக்கா ஆகியோராவர்.
(3) புனித மாற்கு மற்றும் புனித மத்தேயு ஆகியோராவர்.
(4) புனித லூக்கா மற்றும் புனித மத்தேயு ஆகியோராவர்.
(5) புனித மத்தேயு மற்றும் புனித யோவான் ஆகியோராவர்.

**28.** இயேசு 'மீண்டும் பிறத்தல்' பற்றிப் பேசியபோது அதனை உடல் சார்ந்த பிறப்பாக விளங்கிக் கொண்டவர்,
(1) நிக்கதேமு ஆவார். (2) அனனியஸ் ஆவார்.
(3) நிக்கோலஸ் ஆவார். (4) கொர்னேலியு ஆவார்.
(5) புரோகொறஸ் ஆவார்.

**29.** கிறிஸ்தவனான பிளாவியுஸ் கிளமென்சைக் கொன்று பிளாவியா தொமித்தில்லாவை நாடுகடத்தச் செயற்பட்டவன்,
(1) பேரரசன் டெசியஸ் ஆவான். (2) பேரரசன் திராஜன் ஆவான்.
(3) பேரரசன் மாக்சிமியன் ஆவான். (4) பேரரசன் தொமீசியன் ஆவான்.
(5) பேரரசன் மாற்குஸ் அவுரேலியன் ஆவான்.

**30.** புனித ஜெரோம், குருத்துவத்தைப் பெற்ற பின் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு வந்து திருநூல்களை யாரிடம் கற்றார்?
(1) நாசியாவின் கிரகோரியாரிடம்
(2) அலெக்சாந்திரியாவின் புனித சிறிலிடம்
(3) புனித ஜஸ்டினிடம்
(4) புனித அகுஸ்தினாரிடம்
(5) அலெக்சாந்திரியாவின் புனித அத்தனாசியசிடம்

**31.** ஓரிஜின் அவர்களது அடிப்படைத் தத்துவம் போன்ற நூல்களை இலத்தின் மொழியில் மொழிபெயர்த்தவர்,
(1) அலெக்சாந்திரியாவின் சிறில் ஆவார்.
(2) புனித ஜஸ்டின் ஆவார்.
(3) புனித அகுஸ்தினார் ஆவார்.
(4) புனித ஜெரோம் ஆவார்.
(5) தேர்த்துளுலியன் ஆவார்.

[பக். 5 ஐப் பார்க்க

**32.** 21 ஆவது பொதுச்சங்கமாகக் கொள்ளப்படுவது,
(1) கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கமாகும்.
(2) நிசேயா பொதுச்சங்கமாகும்.
(3) எபேசு பொதுச்சங்கமாகும்.
(4) திரிதெந்தீன் பொதுச்சங்கமாகும்.
(5) இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கமாகும்.

**33.** ஆரம்ப காலத்தில் திருச்சங்கங்களைக் கூட்டுவதற்குக் காரணமாக அமைந்தது,
(1) அரச நிர்வாகம் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காகும்.
(2) திருச்சபையின் தலைவர்களாக அரசர்களை நியமிப்பதற்காகும்.
(3) வேத பேத தப்பறைக் கொள்கைகளின் தவறைச் சுட்டிக் காட்டுவதற்காகும்.
(4) பொது நிலையினரின் மறைபோதக பணிபற்றித் தீர்மானம் எடுப்பதற்காகவாகும்.
(5) அரச ஆட்சியின் வரிமுறைகளை அறிமுகம் செய்வதற்காகவாகும்.

**34.** 'பிதாவோடு ஒரே பொருளானவர்' என்னும் எண்ணக்கரு திருச்சபையின் மறை உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது,
(1) நிசேயா திருச்சங்கத்திலாகும்.
(2) கொன்ஸ்தாந்திநோபிள் திருச்சங்கத்திலாகும்.
(3) திரிதெந்தீன் திருச்சங்கத்திலாகும்.
(4) கல்சிதோன் திருச்சங்கத்திலாகும்.
(5) எபேசு திருச்சங்கத்திலாகும்.

**35.** இயுதிகஸ்ஸின் கூற்றை வேத பேதகம் என எடுத்துக்காட்டியவர்,
(1) நாசியாவின் புனித கிரகோரியார் ஆவார்.
(2) கொன்ஸ்தாந்திநோபிளின் ஆயர் பிளேவியன் ஆவார்.
(3) நிக்கோமேதியாவின் ஆயர் எவுசேபியஸ் ஆவார்.
(4) அலெக்சாந்திரியாவின் கிளமெண்ட் ஆவார்.
(5) மிலான் ஆயர் அம்புறோஸ் ஆவார்.

**36.** திருவிவிலியத்தில் **குறிப்பிடப்படாத** எல்லா நம்பிக்கைகளையும் நிராகரித்தவர்,
(1) மாட்டின் லூத்தர் ஆவார்.
(2) பெலாஜியஸ் ஆவார்.
(3) ஜோன் வெஸ்லி ஆவார்.
(4) ஜோன் கல்வின் ஆவார்.
(5) சாள்ஸ் வெஸ்லி ஆவார்.

**37.** திருத்தந்தை ஏழாவது கிளிமெண்ட் அவர்களால் நிராகரிக்கப்பட்ட, இங்கிலாந்து எட்டாவது ஹென்றி மன்னின் வேண்டுகோள் என்ன?
(1) உரோமைக்குப் பயணம் செய்தல்
(2) திருமுழுக்கு
(3) அவருக்கு முடிசூட்டுவது
(4) விவாகரத்து செய்தல்
(5) திருத்தந்தை இங்கிலாந்திற்கு வருகை தருதல்

**38.** பொருளாதார நெருக்கடியால் கஸ்டப்பட்ட சுரங்கத் தொழிலாளர்களுக்கும் கிராமிய மக்களுக்கும் ஆன்மீக ஊட்டம் பெற்றுக் கொடுப்பதற்கு உழைத்தவர்களின் பெயர் / பெயர்களைக் கொண்ட சரியான விடையைத் தெரிவு செய்க.
A - லொயலா இஞ்ஞாசியர்
B - மாட்டின் லூத்தர்
C - ஜோன் வெஸ்லி
D - சாள்ஸ் வெஸ்லி
E - வில்லியம் பூத்

(1) A
(2) B
(3) A, B
(4) B, E
(5) C, D

[பக். 6 ஐப் பார்க்க

**39.** திரிதெந்தீன் திருச்சங்கத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சித் திட்டம்
(1) நற்கருணை பெறுவதற்கு ஊக்குவித்தல்
(2) நேர்த்திகளை உருவாக்க ஊக்குவித்தல்
(3) சிலுவைப் பாதை செய்ய ஊக்குவித்தல்
(4) யாத்திரைகள் செல்ல ஊக்குவித்தல்
(5) தருமம் செய்ய ஊக்குவித்தல்

**40.** திருத்தந்தை பதின்மூன்றாவது சிங்கராயர் மூலம் சமூக நீதி பற்றி எழுதப்பட்ட சுற்றுமடல் எது?
(1) மாட்டர் எட் மஜிஸ்திரா - அன்னையும் ஆசிரியையும்
(2) பாசெம் இன் டெர்ரிஸ் - அவனியில் அமைதி
(3) டேயுஸ்கரிட்டாஸ் எஸ்ட் - அன்பே கடவுள்
(4) ரேரும் நோவாறும் - உழைக்கும் மனிதன்
(5) கரிட்டாஸ் இன் வெரிட்டாட்டே - உண்மைக்குள் அன்பு

**41.** "ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய முடியாத எதையும் மரணத்தறுவாயில் நிறைவேற்ற முடியாது" எனக் குறிப்பிட்டவர் யார்?
(1) வண. யாக்கோமே கொன்சால் வேஸ் அடிகளார்
(2) வண. கிளமென்ட் த சூசா அடிகளார்
(3) வண. யோசப் வாஸ் அடிகளார்
(4) வண. மைக்கல் றொட்றிகோ அடிகளார்
(5) வண. பிரான்சிஸ் சேவியர் அடிகளார்

**42.** போர்த்துக்கேயரின் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தமைக்கான சான்றாக அமைவது,
(1) கண்டியில் கண்டெடுக்கப்பட்ட திருப்பலி அங்கி ஆகும்.
(2) அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்லில் பொறிக்கப்பட்ட சிலுவை ஆகும்.
(3) புத்தளத்தில் கிடைத்த கல்லறைத் தோட்டம் ஆகும்.
(4) அம்பிட்டியவில் கிடைத்த திருப்போர்வை ஆகும்.
(5) மாத்தறையில் கண்டெடுக்கப்பட்ட மரியன்னையின் திருச்சொரூபம் ஆகும்.

**43.** 'ஸ்கோலாகல் கொமிஷம்' என்னும் விசேட நிறுவனத்தின் வழியாகப் பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமிப்பது, பாடசாலை நிர்வாகம் என்பன மேற்கொள்ளப்பட்டது,
(1) போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திலாகும்.
(2) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலாகும்.
(3) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலாகும்.
(4) சுதந்திர ஆட்சிக்காலத்திலாகும்.
(5) சிங்கள அரசர்களின் ஆட்சிக்காலத்திலாகும்.

**44.** 'ஆனந்தக் களிப்பு' என்னும் பக்திப்பாடல் புத்தகத்தை எழுதியவர் யார்?
(1) வண. பிலிப் பல்தேயுஸ் பாதிரியார்
(2) வண. யோசப் வாஸ் அடிகளார்
(3) வண. யோசப் மேரி பிராவி அடிகளார்
(4) வண. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்
(5) வண. மரியாத மிரண்டா அடிகளார்

**45.** வண. யோசப் வாஸ் அடிகளாரின் மறைபோதகக் கொள்கை
(1) பிறநாட்டு உதவியைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.
(2) உரோமையிலிருந்து மறை போதகர்களை வரவழைத்தமை ஆகும்.
(3) இலத்தின் மொழியை மட்டும் ஊக்குவித்தல் ஆகும்.
(4) யாத்திரைகளை ஒழுங்கு செய்தல் ஆகும்.
(5) மறை போதகப் பணிக்காக பொது நிலையினரை நியமித்தல் ஆகும்.

**46.** திருச்சபையின் பிரதான பண்பாக அமைவது
(1) பக்தி (2) பண்பாடு (3) ஆராதனை (4) பரிசுத்தம் (5) மகிமை

[பக். 7 ஐப் பார்க்க

**47.** கி. பி. 4ஆம் நூற்றாண்டில் எதன் மூலமாக கிறிஸ்தவர்களுக்கு சுதந்திர யுகமொன்று உருவாகியது?
(1) எபேசு திருச்சங்கத்தின் மூலமாகும்.
(2) நிசேயா திருச்சங்கத்தின் மூலமாகும்.
(3) உரோமை ஆவணத்தின் மூலமாகும்.
(4) லீமா ஆவணத்தின் மூலமாகும்.
(5) மிலான் சாசனத்தின் மூலமாகும்.

**48.** கி. பி. 1956 இல் வெளியிடப்பட்ட பௌத்த ஆணைக்குழு அறிக்கையின்படி இலங்கை அரசினால் சேவையிலிருந்து நீங்கும்படி கட்டளையிடப்பட்டது,
(1) அரச பாடசாலைகளில் பணிபுரிந்த குருக்களுக்காகும்.
(2) அரச வைத்தியசாலைகளில் பணிபுரிந்த அருட்சகோதரிகளுக்காகும்.
(3) பாடசாலைகளில் பணியாற்றிய கத்தோலிக்க ஆசிரியர்களுக்காகும்.
(4) சமூகப்பணிகளில் ஈடுபட்டவர்களுக்காகும்.
(5) ஆசிரிய கலாசாலைகளில் இருந்த கத்தோலிக்க குருக்களுக்காகும்.

**49.** சபை வாழ்க்கை மற்றும் நம்பிக்கை தொடர்பான உடன்பாடு மற்றும் உடன்பாடின்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்ட ஆவணம்,
(1) மானிட முன்னேற்ற ஆவணம் எனப்படும்.
(2) ஆய்வு அறிக்கை எனப்படும்.
(3) மக்னா கார்ட்டா ஆவணம் எனப்படும்.
(4) லீமா ஆவணம் எனப்படும்.
(5) சர்வதேச சபைகளின் நட்புறவு ஆவணம் எனப்படும்.

**50.** மனிதன் இயற்கையாகவே சமூகத்தன்மை உள்ளவனாகையினால் அயலாருடன் இணைந்து ஒவ்வொருவரினதும் நன்மைக்காக வேலை செய்வது மிக முக்கியம் என்பதனை எடுத்துக்காட்டி அதி. வண. திருத்தந்தை 23ஆம் அருளப்பர் எழுதிய சுற்றுமடல் யாது?
(1) உழைக்கும் மனிதன் (2) நம்பிக்கையின் மறைபொருள்
(3) அவனியில் அமைதி (4) இன்றைய உலகின் திருச்சபை
(5) கிறிஸ்துவின் மறை உடல்

* * *

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

**43 T II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**
※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர்களின் செயல்கள், அவர்கள் எடுத்துரைத்தவை என்பன குறிப்பிடப்படும் திருவிவிலிய நூல்கள் **இரண்டினதும்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) இறைவாக்கினர்களின் படிப்பினைகளின் பிரதான கருப்பொருள்கள் **இரண்டினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) இறைவாக்கினர் எசாயாவின் போதனையின் படி மெசியாவின் பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஆமோஸ் இறைவாக்கினரின் வாழ்க்கை முன்மாதிரியை இன்றைய சமுதாயத்தில் நீர் நடைமுறைப்படுத்தும் விதத்தை நான்கு விடயங்களினூடாக விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) புனித பவுலின் மூன்றாவது மறைத்தூதுப் பயணத்தின் நோக்கங்கள் **இரண்டினையும்** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தின் நோக்கங்கள் **இரண்டினையும்** எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) புனித பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் குறிப்பிடப்படும் விசேட படிப்பினைகள் **மூன்றினை** எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) புனித பவுல் தமது திருமுகங்களின் மூலம் கிறிஸ்தவர்களினதும் கிறிஸ்தவ சபையினதும் வளர்ச்சிக்கு எடுத்த முயற்சியைப் போன்று, நீர் திருச்சபையின் வளர்ச்சிக்காகச் செயற்படும் விதத்தை **நான்கு** விடயங்களின் ஊடாக விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) ஐந்தாம் நூற்றாண்டில் மேற்குப் பேரரசின் வெவ்வேறு பிரதேசங்களின் ஆட்சியைக் கைப்பற்றிய **இரு** கோத்திரத்தினரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) குளுனி துறவற சபையின் மறுசீரமைப்பின் பிரதிபலனாக ஆரம்பிக்கப்பட்ட துறவற வாழ்க்கை முறைகள் **இரண்டையும்**, அவற்றை ஆரம்பித்தவர்களின் பெயர்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) புனித திருத்தந்தை 23 ஆம் அருளப்பர் ஆற்றிய பணிகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பிரதான நோக்கங்கள் **நான்கினை** எழுதி, அதன்படி நீர் இன்றைய சமுதாயத்தில் செயற்படும் விதத்தை **நான்கு** காரணிகளினூடாக விளக்குக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** (i) 'இறை ஏவுதல்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, இறை ஏவுதலின் வகைகள் **மூன்றினையும்** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இறை ஏவுதலினால் எழுதப்பட்ட திருவிவிலியத்தை அன்றாட வாழ்க்கையில் நீர் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) இஸ்ராயேல் மக்கள் வாக்குப்பண்ணப்பட்ட பூமியை நோக்கிச் சென்ற பயணத்தில் பெற்ற பத்துக்கட்டளைகளின் பண்புகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) விழுமியங்களால் ஊட்டம் பெற்ற வாழ்கை நடாத்துவதற்கு பாடசாலை மாணவராகப் பத்துக்கட்டளைகளை நீர் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதனை எவையேனும் **ஐந்து** கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) 1 கொரிந்திரியர் 13 ஆம் அதிகாரத்தில் புனித பவுல் குறிப்பிடும் அன்பின் பண்புகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) 'கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையின் உயிர்நாடியாகும்.' அன்பினால் ஒன்றிணைந்த கிறிஸ்தவ குடும்பமாக திருச்சபையில் செயற்றிறனான முறையில் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) தூய ஆவியின் வருகையையும் அன்றைய தினம் இடம்பெற்ற விசேட நிகழ்வுகளையும் **ஐந்து** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தூய ஆவியால் நிரப்பப்பட்ட நீங்கள், சமுதாயத்தில் திருத்தூதர்களைப் போன்று மறைபோதகப் பணியினை நிறைவேற்றும் விதத்தை **ஐந்து** காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கை மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) வெளிநாட்டு மறைபோதகக் குழுவினரால் இந்நாட்டிற்குக் கிடைத்த சேவைகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு, தற்போது. மறைபோதகப் பணியில் ஈடுபடுவோருக்கு அவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

* * *